

கவிஞர்

புதுவை இரத்தினதுரையின்

# பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்

கவிதைகள்

# வெளியீட்டுவிழா மலர்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

28.03.2005
திங்கள் மாலை 5 மணி
சிவயோகம் மண்டபம்
ரூற்றிங், இலண்டன்

28.03.2005
monday 5 p.m
Sivayogam mandapam
Tooting, London





வந்தவர்களுக்கு
வணக்கம்
வாங்கியவர்களுக்கு
நன்றி

விழாக்குழுவினர்

புதுவைக் கவிஞனை

புலம்பெயர்ந்த நாட்டிலிருந்து வாழ்த்துகிறோம்.


# FAST CASH

WORLDWIDE MONEY TRANSFERS

## Money Transfers to Sri Lanka, India

## 120 Countries

USA, Europe, Canada, Australia, Japan, Asia, Middle East

* Best exchange rate * Professional Service

## 020 8886 4488

- Immediate colection by any person
- Same day credit to any bank account
- Central bank approved official services
- Peace of mind guaranteed

Transfer fee from only £5

நீங்கள் அனுப்புகின்ற பணத்தினை இலங்கையில் 120 இடங்களில் பெறக்கூடிய வசதியுள்ளது, குறிப்பாக யாழ்பாணம் மட்டக்களப்பு திருகோணமலை வவுனியா போன்ற நகரங்களில் எமது கிளையில் விரைவாக பெறக்கூடியதாக இருப்பதுடன், உங்கள் வங்கியிலும் வைப்பு செய்ய கூடிய வசதியும் உள்ளது. அதுமாத்திரமன்றி உங்களது பணத்தினை கனடா அவுஸ்ரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அன்றே பெறக்கூடியதாக இருக்கும்.

SEYLAN BANK LIMITED · COMMERCIAL BANK · සම්පත් බැංකුව SampathBank · PEOPLE'S BANK · HSBC · HATTON NATIONAL BANK LIMITED · Bank of Ceylon

WANT TO KNOW WHAT SRI LANKANS ARE DOING IN THE UK ?

OBA-OGA CLASSIFIEDS RESTURANTS EVENTS

## www.uklanka.net

THE MOST COMPREHENSIVE WEB DIRECTORY LISTING SOCIAL, CULTURAL & BUSINESS LINKS IN THE UK

UKLanka.net

CARS MARRAIGE FRIENDS HOUSES

பண்டிகைக் காலம் எதுவென்றாலும் உங்கள் ... பரிசுப்பொருட்கள் வீடு சேர்ப்போம்

ලංකාවේ වෙසෙන ඔබගේ ආදරණීය නෑදෑ හිතමිතුරන්ට තෑගි භාණ්ඩ වේගවත්ව හා සුරක්ෂිතව දොරකඩටම යැවීමේ සේවය අපෙන්...

House of Lanka


www.houseoflanka.com

Gifts for BIRTHDAYS - ANNIVERSARIES - WEDDINGS - FESTIVALS SPECIAL EVENTS - SYMPATHIES & ALL OTHER OCCASIONS

Cakes - Flowers - Fruit Baskets - Hampers - Electricals & Special Gifts

*Delivered to the Door step of Your Loved Ones...*


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



கவிஞர் புதுவை இரத்தினதுரையின்

பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்

கவிதைகள்

# வெளியீட்டுவிழா மலர்

28.03.2005 திங்கள் மாலை 5.00 மணி

சிவயோகம் மண்டபம்

ரூற்றிங், இலண்டன்.

மலர் வெளியீடு: விழாக் குழு இலண்டன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




**கவிஞர்**

**புதுவை இரத்தினதுரையின்**

# பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்

கவிதைத் தொகுப்பு

# வெளியீட்டுவிழா அழைப்பிதழ்

28.03.2005 திங்கள் மாலை 5 மணி
(வங்கி விடுமுறை)
சிவயோகம் மண்டபம்
இலண்டன் ரூற்றிங்
முத்துமாரி அம்மன் கோயில்

*28.03.2005 monday 5 p.m.*
*(bank holiday)*
*Sivayogam mandapam*
*Muththumari Amman Temple.*
*180 / 186 Upper Tooting Road,*
*Tooting, London, SW 17 7EJ*

## நிகழ்ச்சிகள்

**மங்கலவிளக்கேற்றல்**
வைத்திய கலாநிதி
திருமதி ஆனந்தி கருணைலிங்கம்
திரு.வ.மா.குலேந்திரன்
*(இயக்குநர், சர்வதேச அகதிகள் சம்மேளனம்)*

**அமைதி வணக்கம்**

**வரவேற்புரை**
திரு.பொ.கைலாசபதி வாசன்
*(ரி.ரி.என். தமிழ் ஒளி)*

**வாழ்த்துரை**
பிரம்மஸ்ரீ அ.நா.சோமாஸ்கந்த சர்மா
திரு.ச.ஸ்ரீரங்கன்

**தலைமையுரை**
கவிஞர் ந.சிறீக்கந்தராசா
*(சட்டத்தரணி)*

**சிறப்புரை**
திரு.ஆ.யோ.பற்றிமாகரன்
*(விரிவுரையாளர்)*

**வெளியீட்டுரை**
திரு.பொ.ஐங்கரநேசன்
*(ஊடகவியலாளர் - சுற்றுச்சூழலியலாளர்)*

வெளியிடுபவர்
திரு.சீவரத்தினம்
*(தலைவர்*
*இலண்டன் முத்துமாரியம்மன் தேவஸ்தானம்.)*

முதற்பிரதி பெறுபவர்
பத்மஸ்ரீ ர.கமலநாதக் குருக்கள்
*(என்ஃபீல்ட் நாகபூஷணி அம்மன் ஆலயம்)*

சிறப்புப் பிரதிகள் வழங்கல்

**மதிப்பீட்டுரை**
திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம்
*(பி.பி.சி. தமிழோசை)*
திரு.ஏ.சி.தாசீசியஸ்
*(ஊடகவியலாளர்)*
திரு.எஸ்.கருணானந்தராஜா

**நன்றியுரை**
கவிஞர் பால ரவி

**கலைநிகழ்ச்சிகளும், தொடர்ந்து**
**இராப்போசன விருந்துபசாரமும் நடைபெறும்.**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தன் கவிதைகளால் தணல் மூட்டும்
தமிழீழத் தேசியக் கவிஞனை வாழ்த்துகிறோம்.


சகல விதமான நிதி, கணக்கியல் தேவைகளை
ஒரே இடத்தில் பூர்த்தி செய்ய நாடுங்கள்

# ANDY & CO

**Accountants & Tax Consultants**

## We are specialists in the following

Accounts Preparation | Auditing | Book Keeping
VAT Return Preparation | Payroll Preparation
Tax Planning | Tax Investigation | VAT Investigation
Management Accounts | Self Assessment
Mortgages and Commercial Loans

We provide an efficient, and friendly service for sole trades, partnerships and limited companies


Through our contacts we are able to raise finances for new businesses and expansions

**Contact: VELU ANANDARAJAH** ACEA
**55 - 57 LONDON ROAD, TOOTING**
**LONDON SW17 9JR**

**TEL | 020 8685 1095 MOB | 07752 358 273**


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

புதுவைக் கவிஞனை
புலம்பெயர்ந்த நாட்டிலிருந்து வாழ்த்துகிறோம்.




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# புரட்சிக் கவிஞனே வாழிய நீடு



வீரத்தின் வரலாற்றில் தலைகளை நிமிர்த்திநாம்
மீண்டுமொரு புதுயுகத்தில் சுவடுகளைப் பதிக்கிறோம்.
தீரமுடன் கனல் தெறிக்கும் தேசியக் கவிகளில்
தேசியக் கவிஞனே! நினைத் தரிசிக்கிறோம்.
வாயகன்ற பகைப்புலத்தில் வாழும்திடம் கொண்டிங்கு
தோயும்நின் கவிப்புயலில் சுதந்திரத்தைக் காண்கிறோம்.
பாயும்புலிப் பரணிபாடும் பைந்தமிழ்க் கவியரசே!
நீதிகாக்கும் நிதர்சனத்துள் நின்கவிகள் எழுகவே.

கூவியெழும் ஷெல்களிங்கு கூறுபட்டு வீழ்ந்திடும்.
கோமகனே! நின்கவியால் கொடியபகை மாய்ந்திடும்.
ஓயாது அலையெழுந்து உரிமைக்கீதம் பாடிடும்.
உறுதிகொண்ட தலைவனுக்கு உயர்ந்தபுகழ் சூடிடும்.
சேயெழுந்து பகைநடுங்கச் செங்களத்தில் ஆடியே
சீறிவரும் புலிக்கழுத்தில் வெற்றிவாகை குவித்திடும்.
தேசவாழ்வில் நெறியுணர்த்தும் தேசியத்தின் சிற்பியே!
வீசுகவியால் விடியலொன்று விரைவினிலே தோன்றிடும்.

கவிஞர் வேணுகோபாலன்
இலண்டன்
06.03.2005.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கவிதைகளால் எம்முள்ளே விடுதலைக் கனல் மூட்டும்
தாயகக் கவிஞனை வாழ்த்துகிறோம்.




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# LINGA & CO

*LEGAL ADVISORS AND COMMISSIONERS FOR OATHS*

? தற்போது அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ள சட்டதிட்டங்களில் நீங்கள் சிக்கி தவிக்கிறீர்களா?

? உங்களுடைய பிரச்சனைகளை கருத்தில்கொண்டு உங்களுக்காக செயல்படும் தகுதியும் திறமையும் வாய்ந்த சட்ட நிபுணர்களை தேடுகிறீர்களா?

WE SPECIALISE IN:

- **ALL ASPECTS OF IMMIGRATION AND NATIONALITY MATTERS**
- **WORKS PERMITS APPLICATIONS – ALL CATEGORIES**
- **HIGHLY SKILLED MIGRATION PROGRAMME**
- **FAMILY REUNION VISAS FOR SPOUSES AND DEPENDANT RELATIVES**
- **ASYLUM APPLICATIONS AND HUMAN RIGHTS APPLICATIONS**
- **APPEALS AND BAIL APPLICATIONS**
- **EEC RESIDENCE PERMITS**
- **TOURIST VISA EXTENSION**
- **PERSONAL INJURY**
- **EMPLOYMENT LAW**

10 ஆண்டுகால அனுபவம் உள்ள, பல சட்ட நிபுணர்களைக் கொண்ட
சட்ட நிறுவனத்திடம் இருந்து சேவையை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்

**46 HIGH STREET, COLLIERS WOOD, LONDON, SW19 2BY**

general line: **020 8544 9285** (4 lines)

emergency line: **07771 646441**

fax: **020 8542 9530**

உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள் அனைத்தும் இரகசியமாக பேணப்பட்டு
உங்களுடைய வழக்கின் மேன்மைக்காக பயன்படுத்தப்படும்

E S T A B L I S H E D  I N  1 9 9 4

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கூவி மகிழ்ந்தாடுகிறேன்

பூவரசு வேலியின்கீழ்
நாவுரசி நாதமிசை
புலுனியெனும் புள்ளாரின்
தாவு சிறு குஞ்சுகளின்
பாவு நடைச் சந்தமுறு
பாவினங்கள் பல குவித்துப்
பாவலருள் பெரும் ஏறாய்த்
தாயகத்தின் தலைவனவன்
ஆயகலைத் தமிழ்த் தவிசில்
மேயவனே! மணித்துரையே!

சேராரின் சிந்தையிலும்
ஊருணர்வை ஊட்டுகின்ற
வேர்க்குருவை விஞ்சுமணிப்
போர்க் கவிதைப் பெருங்குவையை
ஆர்க்குமஞ்சா நெஞ்சமுடன்
ஆர்த்திடித்துக் குவிப்பவனே
பார்த்தவற்றால் பயன்நுகர்ந்த
பேர்களிலே யான் ஒருவன்!

தினையளவும் திராணியின்றி
மனைவி பணிவிடை புரியும்
முனைப் பிழந்த பேடியையும்
முனை நோக்கிப் போகவைக்கும்
"நினைவழியா நாட்கள்" என்ற
சுனைக்கவியின் சுழியதனால்
பனைக்குயர்ந்த அலையடிப்பில்
எனைமறந்து மொத்தலுண்டு
நினைவழிந்து போனவன் நான்!

"பூவரசம் வேலி சக
புலுனிக் குஞ்சுகள்" என்ற
தேவரசம் சிந்துகின்ற
பாவிருக்கும் புத்தகத்தைப்
பாவரசே நீ இயற்றித்
தாபரமாய்த் தமிழருக்குத்
தந்தை என்ற செய்திவந்து
பாவியற்றப் பழகுகின்ற
ஆவி என்னை வருடியதால்
கூவி மகிழ்ந் தாடுகிறேன்!
பா அவற்றைப் படிப்பதற்காய்
ஆவலெனக் கோங்கிறது!

பூவரசவேலி என்றும்
புலுனிகளின் குஞ்சு என்றும்
நாவினிக்க நாடுவக்க
மா பொருத்த மாகவன்றோ
நாமமும் நீ சூட்டியுள்ளாய்
தாயகத்தின் வீடவற்றின்
சாய்தலற்ற வேலிகளின்
பாயாத எல்லை சொல்லும்
காய்வறியாப் பூவரசும்
தாய்நிலமே தஞ்சமென்னும்
ஓய்வறியாப் புலுனிகளும்
வீயாத தமிழினத்தின்
அடையாளச் சராசரங்கள்!

பூவரசின் கதியாலைத்
தாபரமாய் வேலிதொறும்
காமரமாய் நட்டு வைக்கும்
பாவமற்ற தமிழினத்தைப்
பூமியற்றோர் ஆக்கிவிட
ஆமியினர் நம் வீட்டின்
எல்லைகளைக் கல்லுவதைச்
சொல்லுகின்ற போக்கில் உன்னால்
நல்லதலைப் பேற்றுளது!

தாவறு நம் தலைவனின்கீழ்
'கா' அரசொன் றின்றிருந்தும்
பூமியொப்பும் அரசின்றித்
புழுங்குகின்ற தமிழருக்குப்
பூமியிலோர் அரசுதிக்கப்
பூபாளம் பாடுமுன்னால்
தேவாரம் போலமைந்து
தெம்புதர வாழ்த்துகிறேன்.

கவிஞர் செ.சிறீக்கந்தராசா, BSC.LL.M
66, உவெஸ்றோ காடின்ஸ்
இல்போட்டு
எசெக்சு
இங்கிலாந்து.
28.02.2005.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

புதுவைக் கவிஞனின்
பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளுக்கும் எமது வாழ்த்துக்கள்.




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தேசக் கவிஞனின் வெளியீட்டுவிழா
சிறப்புற வாழ்த்துகிறோம்.

# GANAPATHY CASH & CARRY

*For All Your Groceries & Seafood*

உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள், பழவகைகள், சகலவிதமான உடன் மரக்கறிவகைகள், கடலுணவுப்பொருட்கள், அனைத்துவிதமான மளிகைப்பொருட்கள் ஆகிய அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள உங்கள் நினைவில் என்றும் இருக்க வேண்டிய இடம்...




YALEE MARK PRODUCTS
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

# WINE MART

*Incorporated in the Ganapathy Chain*

உங்களுக்குத் தேவையான அனைத்துவிதமான உள்நாட்டு, வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் குளிர்பானங்கள் கிடைக்கும்

**34 - 38 Ealing Road, Wembley**
**Middx HA0 4TL**

**TEL : 020 8795 4627**
**FAX : 020 8903 3185**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கவிஞரின் வாக்குமூலம்

கால நதிக்கரையில் கால்நனைத்தவாறு நீளநடக்கின்றேன். கரையோரம் என் சுவடுகள் கிடக்கின்றன கவிதைகளாக. நாளாந்தமான புதிய விதிகளின் பிறப்பில் என் கவிதைகளிலும் வேண்டியன நிலைத்தும், வேண்டாதன அழிந்தும்போக எஞ்சியவற்றில் வாழ்வேன் நான். என் வாழ்வும், என் எழுத்துமே நான் உலகுக்குச் சொல்லும் செய்தி. இவை இரண்டையும் மீறி என்னைப் பிரகடனப்படுத்துவது தேவையற்றது.

வாழ்வையும், எழுத்தையும் வகைபிரித்து அதுவேறு, இதுவேறு எனச் சொல்லும் இரட்டை வாழ்வு எனக்கென்றுமே இருந்ததில்லை. மற்றவருக்குச் சொல்லமுன்னர் நானே என் எழுத்துக்கு உயிருள்ள சாட்சியாக இருக்க விரும்புகின்றேன். இதனாற்தான் விடுதலையை அவாவுறும் கூட்டத்திலொருவனாய் என்வாழ்வு அர்த்தத்துடன் கழிகிறது. உயிர்ப்புடன் இந்த உலகமிருப்பதாயும் என்னால் உணரமுடிகிறது. வெறுமை, தனிமை, அந்நியம், மந்தை பிரிந்தேகும் மனநிலை ஏதுமற்று சமுத்திரத்தில் ஒரு துளியாய், பெருவிருட்சத்தில் ஒரு துளிராய் என்னால் இருக்கமுடிகிறது. மனுக்குலத்தின், என்னினத்தின், நான் வாழும் காலத்தின் மகிழ்ச்சி, துயரம், வெற்றி, தோல்வி, வாழ்வு இவை தவிர, தனிப்பட்ட வாழ்வும், உணர்வும் எனக்கில்லை. இவற்றைப் பாடி நகர்கிறது என் கவிநதி. மொத்தப் பிரபஞ்சமுமே எனக்குமானதெனும் நினைப்பில் ஒரு வாழ்வு சமைத்து அதற்குள்ளே என் நாளாந்தம் கழிகிறது.

அந்தஸ்துக்காகவோ, அங்கீகாரத்துக்காகவோ, சாவுக்குப் பின்னும் வாழ்வதற்காகவோ நான் எழுதுவதில்லை. என்னால் இனிப் பொறுக்கமுடியாது எனும்நிலை என்னைப் பிடித்து இருத்தும்போது மட்டும் எழுதுவேன். அவை கவிதைகளா இல்லையாயென்பதும் எனக்குத் தெரியாது. அது பற்றிய கவலையும் கிடையாது. நல்ல கவிஞனாக இருப்பதிலும், நல்ல மனிதனாக இருப்பதே என இலக்கு. இதற்காக என்னை வனைந்தபடி நாளாந்தம் போகிறது. எவரையும் என் பாதம் மிதியாது. என்னையும் எவரும் மிதிக்க அநுமதியேன். விட்டு விடுதலையான ஒரு சிட்டுக்குருவியின் கட்டற்ற வாழ்வின் கச்சிதமே நான் அவாவுறும் வாழ்வு. இதறகான பாதையில் என் கவிதைகளும். போதுமெனக்கு. அந்திமத்தில் வந்ததுக்கான பணி முடித்துப் போகிறேனெனும் திருப்தியுடன் வாழ்வு முற்றிற்று எனச் சாவுத்திரை விழுவதே சந்தோஷம். மரண பயமற்று 'எடுத்துச்செல் என்னை' என நான் காலத்துக்கு என்னைக் கையளிப்பேன். இந்தளவு வல்லமை எனக் குண்டு. இந்த உலகில் நானிருந்த இடம் வெறுமையுறும்போதில் 'தனது கடமை முடித்தேகினான் ஒரு கவிஞன்' என ஓரிரு வாய்கள் பேசினால் போதும். இதறகாக நான் எழுதிக்கொண்டு மட்டும் இருக்கவில்லை. பணி செய்துகொண்டுமிருக்கிறேன். எழுதுவதிலும் பார்க்க மேலானது, எழுத்திலிருக்கும் சத்தியத்திலும் பார்க்க அதிகமாக என் வாழ்விலிருப்பதே. தொடர்ந்தும் இருப்பேன் இத்திசைவழி.

*2005* புதுவை இரத்தினதுரை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஈழத் தமிழரின் விடிவுக்கு பூபாளம் இசைக்கும்
புதுவைக் கவிஞனுக்கு வாழ்த்துக்கள்.


CARTHIC SCHOOL OF MOTORING

(சாரதி பயிற்சி பாடசாலை)

Driving Standards Agency Approved Driving Instructor (car)
(SOUTH LONDON)

Excellent Teaching
Value for Money
Top Pass Rate
Pass Plus




அனைவருக்கும் சிறப்பான தரத்தை வழங்குவதில் தேர்ச்சி பெற்றவர்

இறுதிப்பரிட்சைக்கான மாதிரிப்பரிட்சை

எழுத்துப் பரிட்சைக்கான உதவிகள்


Safe Driving for Life

CARTHIC.P

தொடர்புக்கு : 07939 453 022


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தன் கவிதைகளால் தணல் மூட்டும்
தமிழீழத் தேசியக் கவிஞனை வாழ்த்துகிறோம்.




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# வாழ்க்கையின் சித்திரிப்பாகும் கவிதைகள்

புதுவை இரத்தினதுரையின் கவித்துவம் அவர் காட்டும் யாழ்ப்பாணத்து சாதாரண மக்களது வாழ்க்கைமுறை சித்திரிப்பாகும். அந்த வாழ்க்கைமுறை சித்திரிப்பினை இத்தொகுதியிலுள்ள சில பாடல்கள் கொண்டே காட்டலாம். உதாரணமாக, இக்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள 'மார்கழி அழகு' என்னும் கவிதையில், மார்கழி மாதத்தின் வசீகரம் - இந்தக்கவர்ச்சி அந்த வாழ்க்கையினூடாக வருவதொன்று. பனிமூட்டம் மூடிய தார்த்தெரு, சற்றுத் தூரத்தே கோயில் மணி, திருவெம்பா பூசையின் அரோகரா ஒலி, ஏற்கனவே எழும்பி குளித்து வந்த மனைவி எழுப்புதல் விவரணங்களாக சொல்லப்படாது ஒவ்வொன்றும் அழகியற் படிமங்களாக. அதாவது அந்த வாழ்க்கைப் பெருவோட்டத்தினுள் வருகின்ற கவர்ச்சி மிகுந்த கணங்களாக/closeup காட்சிகளாக வருகின்றன. வாழ்க்கையின் அன்றாட நீரோட்டத்தினுள் நின்று திரும்பிப் பார்த்து அவதானிக்காத அழகியற் காட்சிகள் இந்தக் கவிதையில் ஒரு காண்பியமாக, cameraவின் அசைவாக நகருகின்றன. அதேவேளையில் பயன்படுத்தப்படும் மொழி அந்த அநுபவத்திற்கு அப்பாலானவையாக அல்லாமல் அதற்குள்ளேயே நிற்கும் தன்மை 'மார்கழி மாதம் மகாலட்சுமி' என்கின்ற அந்த குறிப்புரை. இந்த சித்திரிப்பின் பலம் என்னவென்றால் இவ்வாறு சித்திரிக்கப்படும் காட்சி இன்று அரிதாகிவிட்டமைதான். நமக்கு உடனே அந்த ஞாபகங்கள் வருகின்றன.

இவ்வாறு நமக்குப் பழக்கமானவையும் நினைத்து நினைத்து இன்புறத்தக்கவையுமான கணங்கள், சந்தர்ப்பங்கள், சூழல் விவரணங்கள் அமைகின்ற பொழுதில், அந்தக் கவிதையின் வார்த்தைகள் நெஞ்சில் தைக்க வைப்பவை அந்த அவதானிப்பினுள் காணப்படும் ஒரு முக்கிய இயல்பாகும். பாடும் பொருள்பற்றிய முழுத்தோற்றத்தையும் அந்தக் காட்சிஅமைப்புக்குள் நிற்பனவாகிய மிகமிகச்சிறிய விடயங்களையும் சேர்த்துக் கொள்வது ஒரு நல்ல ஓவியன் பின்புல வர்ணத்தின்மீது கைலாவகத்தினால் அழுத்தியும் மெலிவித்தும் காட்டும் தன்மைபோல் அமைவதை உணரலாம். இந்தத் தொகுப்புக்கான தலையங்கமே அந்த மனப்பாங்கின் வெளிப்பாடுதான். தழைத்து இறுகி கொப்புக் கொப்புக்களாய் பச்சைநிறமாக மேலே தெரியும் பூவரசம்வேலியோடு புழுவைத்தேடி தத்தித்திரியும் அந்த மிகச்சிறிய அழகான பறவையும் இந்த பதிவுக்குள் வந்துள்ளது. பருவரைவும் நுண்ணியதான குறிப்பும் (the macro and the micro) அந்த கவிதைகளை காண்பிய (visual) தன்மையுடையனவாக ஆக்குகின்றன. இந்த இயல்பினை புதுவையின் பாடல்களில் பரக்கக்காணலாம். இவ்வாறு சொல்லும்பொழுது, புதுவை இரத்தினதுரை எனும் மனிதனதும், அவரது கவித்துவ ஆளுமையினதும் பிரதான இயல்பு ஒன்று வெளிவருகிறது. அதாவது ஒவ்வொரு கட்டத்திலும் அல்லது வேளைகளிலும் தான் 'உணர்கின்றதை' உணர் முறைமை பற்றிய ஒளிப்பு மறைப்பு இல்லாமல் கூறுவதுதான். அந்த அளவில் இவரது படைப்புக்களிலே ஒரு 'நேர்'மை தொனிப்பதை எடுத்துக் கூறல் அவசியமாகும்.

2005


பேராசிரியர் கா.சிவத்தம்பி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கவிதைகளால் எம்முள்ளே விடுதலைக் கனல் மூட்டும்
தாயகக் கவிஞனை வாழ்த்துகிறோம்.




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# உணர்ச்சிக் கவிஞரின் உள்ளத்திலிருந்து

ராஜ் நகர்
மேட்டுக் குப்பம்
சென்னை 96
தமிழ்நாடு.

புதுவை இரத்தினதுரை
புரட்சியின் குரல்.
கட்டுடைத்து முழங்கும்
கார்கால மேகத்தின் வெடிப்பு.
சிறகுகளை இழக்க விரும்பாத
பறவை.
தமிழீழத்தின் போர் முரசு.
எதிரிகள் அஞ்சும் எழுதுகோல்.
வளையத் தெரியாத பனை.
மானம்பாடி.
கண்ணீரில் முளைத்த தாமரை.
நொந்தவனின் பெருமூச்சு.
அறத்தின் சினம்.
இவை அனைத்துக்கும் மேலாக
என் இனிய தம்பி புதுவை இரத்தினதுரை -
புலிகளின் புலவன்.
வாழ்த்துகிறேன்..
'பூவரசம் வேலியும்
புலுனிக் குஞ்சுகளும்' என்னும்
அவன் படைப்பு இனிது பூக்கட்டும்.
எந்த இலக்கியமானாலும்
அவன் எழுத்துக்கள் நெருப்பின்
விதைப்பே என்பதில் ஐயமில்லை.

அன்புடன்
காசி ஆனந்தன்

23.02.2005

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# SATHY ESTATES LIMITED

## Residential Sales and Lettings

**Landlords:** Your rent is Guaranteed
Free Management services
Guaranteed rent for 52 weeks a year

**Sales:** Properties required for the areas
Listed below
Our commission rates are competitive
We give a substantial reduction for sole agencies

**Areas:** London Borough of Brent, Harrow, Ealing,
Barnet, Hammersmith & Fulham & Westminster

**Tenants:** Accommodation arranged to suit your comfort

Pleasurable and peaceful life is everybody's dream throughout their life span

*For more details contact by telephone*

**HARLESDEN OFFICE**
220 High Street
Harlesden
London NW10 4SY
Tel: 020 8961 9613
Fax: 020 8961 9614

**STANMORE OFFICE**
306 Honeypot Lane
Stanmore
Middx HA7 1LY
Tel: 020 8204 9444
Fax: 020 8204 2666

**HARROW OFFICE**
117 Headstone Road
Harrow
Middx HA1 1PG
Tel: 020 8861 1110
Fax: 020 8861 1011

website: www.sathy.com


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

புதுவைக் கவிஞனின்
பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளுக்கும் எமது வாழ்த்துக்கள்.




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# போராட்டமும் தெரியும் இலக்கியமும் தெரியும்

54, ஜானி ஜான்கான் சாலை,
ராயப்பேட்டை,
சென்னை 14,
தமிழகம்.

"எமக்குரித்தான துண்டு நிலத்தில் ஒரு காட்டாமணக்குச் செடியாவது முளைக்க வேண்டும்" என்று, அன்று 'மானுடத்தின் தமிழ்க்கூடல்' மாநாட்டில் புதுவை இரத்தினதுரை பேசியது இன்னும் என் காதுகளில் ஒலிக்கிறது. இவரின் கவிதைகளும் அப்படித்தான். மண்ணில் முளைத்தவை.

தமிழீழ விடுதலைப்போர் மிகச் சிறந்த படைப்பாளிகள் பலரை உலக இலக்கியத்துக்கு வழங்கியுள்ளது. போராடும் உலக மானுடம் தமிழீழத்தின் வலியைத் தனது வலியாகவும், தமிழீழ விடுதலைப்போரைத் தனது போராகவும் வரித்துக்கொள்வதற்கு இப்படைப்பாளி களின் எழுத்துக்கள் முன்மொழிவைச் செய்துள்ளன. இவர்களுள் புதுவை இரத்தினதுரை களத்தில் நிற்கிறார். இவருடைய சொற்கள் காட்டுச் செடிகளில் பூக்கிறவை. கடலில் நுரை கொப்பளிப்பவை துப்பாக்கியில் புகைகிறவை. போராட்டத்தைப் பேசுகிறவை இலக்கியமாகாது என்கிற ஒருபக்கப் பார்வைக்குத் தமிழீழ இலக்கியங்கள் மாபெரும் அறைகூவல்களாக எழுந்தன. இந்த அறைகூவல்களில் வலிமையாக ஒலிக்கும் குரல் புதுவை இரத்தினதுரையுடையது. இவருக்குப் போராட்டமும் தெரியும், இலக்கியமும் தெரியும்.

இப்படி ஒரு படைப்பாளியை எனக்குத் தெரியுமென்பதில் நான் பெருமிதம் கொள்கி றேன். எழுத்துக்களில் முகம்பார்த்துக்கொண்டதில் மட்டுமல்ல... வாஞ்சையுடன் ஆரத் தழுவியதிலும் எங்கள் தோழமை உயிர்த்தது. எல்லோரிடமும் பேசும் வல்லமை பெற்ற அவரின் எழுத்துக்கள் எங்கிருந்தாலும் என்னுடன் பேசும்.

அன்புடன்
கவிஞர் இன்குலாப்

20.02.2005

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தேசக் கவிஞனின் வெளியீட்டுவிழா
சிறப்புற வாழ்த்துகிறோம்.

# T.N.MOTORS SERVICE

* SERVICING * REPAIRS * ALL MAKES & MODELS
AND BODY WORK
M.O.T.s, WELDINGS,
AUTOMATIC & MANUAL GEARBOX REPAIRS,
ENGINE REBUILD SPECIALISTS
INSURANCE WORK UNDERTAKEN

## RECOVERY SERVICE

**Contact** **THIRU**
**ARUL**

W/SHOP 1,
R/O 36 A GREENFELL ROAD,
MITCHAM, SURREY CR4 2BY
TEL : 020 8648 3458
FAX : 020 8648 3961
MOB : 07956 274 764

**Our New Branch**

181 Handcroft Road
West Croydon
Surrey
CR0 3LX
Tel : 020 8689 1984




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஈழத் தமிழரின் விடிவுக்கு பூபாளம் இசைக்கும்
புதுவைக் கவிஞனுக்கு வாழ்த்துக்கள்.


# ARAVINDANS

**Solicitors and Commissioners for Oaths**

We deal with Residential (Flats, House)
and Commercial, Conveyancing, Purchase of Off Licence,
Restaurants, Groceries, Right to buy sponsorship and Power of Attorney

*Partners: S.Aravindan & R.Aravindans*

*We provide friendly legal services*

437 Katherine Road, Forest Gate, London E7 8LS

**Tel: 020 8503 5034**

Fax: 020 8471 7307, DX7421 EAST HAM




# பலமற்ற மக்களின் பலமான கவிதைகள்

புதுவை இரத்தினதுரை என்றுமே மனுக்குலத்தை நேசிக்கின்ற ஒரு கவிஞன். இன்று நேற்றல்ல பல ஆண்டுகளாக மக்களுக்காகக் கவிதை புனைந்து வருகிறார். என்றுமே பலமற்ற மக்களுக்காக அவர் குரல் கவிதைகளூடாக ஒலித்தது. ஆனால் பலமுள்ள அநீதிக்கு எதிராக அவருடைய குரல் இன்னும் பலமாக ஓங்கி ஒலித்து வருகிறது. தமிழ் மக்களுடைய பண்பாட்டுத் தளத்தை நன்கு விளங்கிக்கொண்ட கவிஞர் அவர்.

வீரமும் சோகமும் மலிந்ததாக எங்கள் மண் இருக்கின்றது. எத்தனையோ இளையவர்கள் நடுகற்களாகி வருகின்றனர். சங்க காலத்திலே ஆண் வீரர்கள்தான் நடுகற்களாயினர். ஆனால் எங்கள் மண்ணிலே வீரப்பெண்கள் பலர் நடுகற்களாகும் விந்தை நடைபெறுகின்றது. இக்கல்லறைகளை, நடுகற்களைப் பாடுகின்ற கவிஞர்களிலே புதுவை இரத்தினதுரையை நான் முதற்கவிஞனாகக் காணுகின்றேன். Elegies எனப்படும் கல்லறைப் பாடல்கள் பாடிச் சிறப்புற்ற ஆங்கிலக் கவிஞனான Gray போன்று தமிழிலே புதுவையினுடைய கல்லறைப் பாடல்கள் அமைகின்றன. அவை நெஞ்சை உருக்குவன; உணர்வைத் தட்டியெழுப்புவன; வீரத்தை அடிப்படையாகக் கொண்டமைவன.


புதுவையின் கவிதைகள் நெஞ்சுக்குள் ஊடுருவிச் சென்று நிமிர்ந்து நிற்கவைப்பன. பெரும்பாலான கவிதைகள் இப்படித் தட்டியெழுப்பும் பண்புடையன. நடைமுறை உண்மை களை அப்படியே சுட்டிக்காட்டி உணர்வை வளர்ப்பன. வீரநடை போடச்செய்வன.

தன்மானம், மண்ணிலேகொண்ட காதல், அந்த மண்ணை ஆக்கிரமிக்கவரும் எதிரிக்கு எதிரான களமாடல், களத்திலே வீரமரணம் அடைந்தோரின் பெயரும் பீடும் பொறித்தல் என்பனவெல்லாம் புதுவை என்னும் கவிஞனின் கவிதைகளிலே நடைபெறுகின்றன

*1993* பேராசிரியர் அ.சண்முகதாஸ்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தன் கவிதைகளால் தணல் மூட்டும்
தமிழீழத் தேசியக் கவிஞனை வாழ்த்துகிறோம்.




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# பாரதி சொன்ன அக்கினிக் குஞ்சு

தூர இருந்து விமர்சித்தல், வெற்றி பெற்றபின் உரிமை கொண்டாடுதல், மெலியரெனில் மீக்கூறல், வலியரெனில் வழிமொழிதல் என, நம் இலக்கிய உலகைப்பற்றிக் கிடக்கும் பல நோய்கள் புதுவையிடம் இல்லாதது புதுமை. கொள்கைக் கண்ணாடிகளைத் தூர எறிந்து, எதையும் தன் சொந்தக் கண்ணால் காணும் சுயம் புதுவையின் தனித்தன்மை. பேசவும், எழுதவும் மட்டுமே இலக்கியவாதியெனும் வரையறைகளைத் தகர்த்து, 'செயற் படவும்' எனும் புதுஎல்லையை வகுத்துக்கொண்டவர். ஈழத்துக் கவிதை உலகில் புதுவைக்கு ஒரு தனி இடம் உண்டு. வடிவம், இலக்கியத் தரம், வற்றாத கற்பனை, இவை எல்லாவற்றையும்விட உண்மையைக் கண்டு உளம் கொதிக்கும் தன்மையே புதுவையின் கவிதைகளின் உயிர்ப்பு. நெஞ்சத்திலிருந்து வார்த்தைகள் பிறப்பதால், மற்றவர் செவிதாண்டி உளம் சேரும் தன்மை அவர் கவிதைகளுக்கு உண்டு. அவ்வாற்றல் தான் இளைஞர்களைப் புதுவையின்பின் குவியச் செய்தது. கவிதையால் மக்களைத் தொட்டு, மாற்றங்கள் விளைவித்த பெருமை ஈழத்துக் கவிதை உலகில் புதுவை ஒருவர்க்கே உரிய தனிப்பெருமை. மகாகவிகூட இலக்கிய உலகில்தான் பெரிதும் பேசப்பட்டார். சினிமாப் பாடல்களைத் தாண்டி, சாதாரண பாமரனாலும் கவிதை சொல்லப் பட்டதென்றால் அது புதுவையின் தனிச்சாதனை.


புதுவையில் நான் பொறாமைப்பட்ட ஒரு காலமும் உண்டு. இலக்கியத்தில் ஆர்வம் கொண்ட உண்மை இளைஞர் பலர் எங்கள் கழகத்தில் இருந்தனர். அவர்களுக்கு என்மேல் எல்லையற்ற விருப்பு. புதுவையுடன் நட்புண்டாகி கழகத்தார் அவருடன் உறவுகொண்டதும், என்னைச் சூழ்ந்திருந்த அத்தனை இளைஞர்களும் புதுவையின் தாசர்களானது கண்டு நான் பொறாமைப்பட்டிருக்கிறேன். புதுவையைக் காணவென, அதிகாலையில் எழுந்து பல மைல்களுக்கு அப்பாலிருந்து காதலியைத் தேடும் காதல் ஆர்வத்துடன் ஓடிவந்த அவ் இளைஞர்கள் செயல் என்னைத் திகைக்கச் செய்திருக்கிறது. சுயம், அறிவுக்கூர்மை, ஆற்றல் என்பவற்றோடு, இறையருளாய்க் கிட்டிய கவித்துவமும் கூடிய அவர் இயல்பு. என்னையும் அவரின் தாசனாக்க என் பொறாமை மெல்ல மறைந்துபோனது.

புலிகள் இயக்கத்தில் இணைந்தபின்தான், புதுவையைப் பலரும் போராளி என்கின்றனர். அக்கருத்தில் எனக்கு உடன்பாடில்லை. சில போராளிகள் உருவாக்கப்படுகின்றனர். சில போராளிகள் பிறக்கின்றனர். புதுவை ஒரு பிறவிப் போராளி. பாரதி சொன்ன 'அக்கினிக் குஞ்சு'. நான் அறிந்தவரை புதுவையின் அகத்துள் ஒரு போராட்டக்கனல் எப்போதும் இருந்தது. அக்கனல்தான் காலத்துக்குக் காலம் புதுவையைப் பல போராட்டங் களிலும் இணையச் செய்தது. ஒன்றை என்னால் உறுதியாகச் சொல்லமுடியும். ஈழ விடுதலைப்போராட்டம் முடிந்த பின்பும், ஒரு போராளியாய்த்தான் புதுவை இருப்பார். அதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

2004

கம்பவாரிதி இ. ஜெயராஜ்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# INTERNATIONAL REFUGEE ORGANISATION

குடிவரவு ஆணையாளர் அலுவலகத்தினால் குடிவரவு
ஆலோசனை வழங்க தகுதிவாய்ந்த நிறுவனமாக
அங்கீகரிக்கப்பட்ட தமிழர் நிறுவனம்

- அரசியல் தஞ்ச விண்ணப்பங்கள்
- மேன்முறையீடுகள்
- திருமண விண்ணப்பங்கள்
- மாணவருக்கான விசா நீடிப்பு
- UK யில் வேலை வாய்ப்புக்கான Visa ஒழுங்கு செய்து தரப்படும்

அதிகபடியான அரசியல் தஞ்சம் வழக்குகளை வென்று எடுத்து ஒரே நிறுவனம் உங்கள் அரசியல் தஞ்சப் பிரச்சனைகளை வேறு எந்த வித பிரச்சனைகளையும் நியாயமான கட்டணத்தோடு வாதாடி வென்று எடுத்து தருவோம். உங்களின் அரசியல் பிரச்சனைகளுக்கு தயங்காது தாமதமின்றி இன்றே நாடுங்கள்!

International Refugee Organisation இவற்றுடன்
உங்கள் பிள்ளைகள் ஏழு வருடங்கள் தொடர்ச்சியாக
இங்கே வசித்திருந்தால் குடும்பத்தினருக்கான
நிரந்தர வதிவிட உரிமை பெற்றுத் தரப்படும்.
நீங்கள் தொடச்சியாக 10 வருடங்கள் சட்ட ரீதியாக
அல்லது சட்ட விரோதமாக 14 வருடங்கள்
வசித்திருந்தால் நிரந்தர வதிவிட உரிமைகள் விண்ணப்பிக்கலாம்.
2001-2003ல் ஆண்டுகளில் அதிக அளவு மேன்முறையீட்டு
வழக்குகளில் நாம் மிகக் கூடியளவு வெற்றி பெற்றிருக்கின்றோம்.

தொடர்புகளுக்கு : Organisar : **Mr. Kulendran**
Advisor : **Miss. T. Kulendran**


## International Refugee Organisation

**1083 Garrate Lane, Tooting London SW17 0LN**

**Tel : 020 8682 9480 / 020 8682 4494 Fax : 020 8682 9922**


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தேசக் கவிஞனின் கவிதைகள்
இன்னும் வருக இனியும் மலர்க.




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# புதுவை என்றால் புலமை

புதுவை என்பதற்கு 'புலமை' என்றொரு அர்த்தத்தையும் இனிமேல் தமிழ் அகராதியில் சேர்த்துக்கொள்ள வேண்டும். அன்புச் சகோதரர் புதுவை இரத்தினதுரை அவர்களின் கவி வரிகளைப் படிக்கும்போது அவற்றிலே எளிமையான தமிழின் நடையும், ஆழ்ந்த கருத்துச் செறிவும், அனுபவத்தின் முதிர்வும், தாளாத தமிழ்மண் பற்றும், மண்ணின் விடிவைநோக்கி வீறுநடை போடும் எழிலும் எப்போதும் கலந்திருப்பதைக் காணலாம். எமது மண்மேலும், மொழி மேலும் மாறாத பற்றுக்கொண்டவர்களுக்கு இவைகள் மேலும் புதியதொரு தெம்பைக் கொடுக்கும். படிப்பவர்களின் இதயங்கள் அத்தனையையும் தொட்டு நிற்கும்.

தாயகம் காப்போரின் திறனைத் தன் வற்றாத கற்பனை வளத்தால் வடிக்கும்போது எம் கையிரண்டும் குவியும். அவை பூக்களை அள்ளிச் சொரியும். எதிரிகளினதும், துரோகிகளினதும் கயமையைச் சாடும் பாடல்களைப் படிக்கும்போது உடலில் ஓடும் குருதி கொதிக்கும். உள்வாங்கும் மூச்சு அனலாகி வெளியேறும். இவற்றைவிட பக்திப் பாடல்களாகட்டும், பல்வகைப் பாடல்களாகட்டும் அவற்றிற்கேற்ப பொருள்மிகுந்த சொற்களைக் கோர்த்து, சுவையினை ஊட்டி, கவிவரிகளை நிரைப்படுத்தும் உயரிய புலமைத்துவத்தைப் புகழாமல் இருக்கமுடியாது.

'பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்' இதுவும் மண்வாசனை கலந்த ஒரு புதுமையான தலைப்புத்தான். இணையத் தளத்திலும்சரி வேறு எங்காவதும்சரி இவரது கவிதைகளைக் கண்டால் நான் அவற்றைப் பிரதி எடுக்காமல் விடுவதில்லை. இவரது படைப்புக்கள் எல்லாம் எமக்குத் தேனானவை. எல்லாவற்றையும்விட மேலானவை. எப்போதும் எம்முடனே பொக்கிஷங்களாக இருக்கவேண்டியவை.

தாயகக் கவிஞரின் இந்தப் புதிய நூல் எப்போது வரும் என்று எதிர்பார்த்திருக்கின்றேன். படிப்பதற்குக் காத்திருக்கின்றேன். புதுவை அவர்களது புலமைக்கு என் தலை சாய்க்கின்றேன். இவர் இன்னும் பல நூல்களை எமக்குத் தரவேண்டும் என்றும் வாழ்த்தி, இறைவனை வணங்குகின்றேன்.

உரும்பிராய் எம்.ரி.செல்வராஜா
அதிபர்
மேற்கு இலண்டன் தமிழ் பாடசாலை.

28.02.2005

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

புதுவைக் கவிஞனின்
பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளுக்கும் எமது வாழ்த்துக்கள்.


# LinkAIR
Travels Limited

IATA

SriLankan

Main agent for
Srilnkan Airlines and Quatar Airways
Best Fares to Colombo, Madras, Singapore, Canada, Kulalampur
Please Call: 020 8665 0206
Open 6 days a week
Special Fares To Colombo - Jaffna - Colombo
We also arrange Traval Insurance, Hotels and Transfers Indian visa arranged

LINKAIR TRAVELS LTD
361 London Road, Croydon, Surrey CR4 3PB
Tel: 020 8665 0206 Fax: 020 8689 2576

# SAMRAS VIDEO


174, Tooting High Street
Tooting, London SW17 ORX
Tel : 020 8672 9300





லண்டனில் உங்களுக்கு கலை-இசை-சங்கீதம் எதுவானாலும்
ஒருமுறை விஜயம் செய்யுங்கள் உண்மை விளங்கும். தமிழ்,
ஹிந்தி, மலையாளம், தெலுங்கு வீடியோ, ஓடியோ சிடி, மற்றும்
புதிய, பழைய திரைப்படங்கள், திரைப்படப்பாடல்கள்,
கர்நாடக இசை, பக்திபாடல்கள் - இன்னும்
பல அனைத்தையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம் சாம்ராஸ் வீடியோ


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# அருவிபோல் பாயும் கவிதைகள்

உலகில் இன்று தமிழ் மக்கள் புரட்சிக்கு உருக்கொடுத்து, புலிக்கொடியின் வீர வரலாற்றையும், பிரபா கீர்த்தியையும் கவிதை வடிவில் தரும் எந்தக் கவிஞரும் புதுவை இரத்தினதுரைக்கு நிகராக முடியாது. இன்று போர், சமாதானம், நிர்வாகம், புனரமைப்பு, புல்லானாலும் ஆயுதம் என்று புதிய சித்தாந்தமொன்றை பிரபாகரனின் சிந்தனைகளிலிருந்து கண்டு ஏற்றுக்கொள்ள ஓர் மூத்த தலைமுறையாளனான புதுவை யின் கவிதைகள் வழிசமைக்கின்றன.

சென்றவருடம் ஸ்ரீலங்காவின் தலைநகர் கொழும்பில் நடைபெற்ற தமிழ் - சிங்கள கலைஞர்களின் கூடலில் பல சிங்கள ஊடகவியலாளர்கள் புதுவை இரத்தினதுரையின் கவிதைகள் சிலவற்றை மொழிபெயர்த்து 'மஞ்சரி' என்ற சிங்களப் பத்திரிகையில் வெளியிட்டது எமக்குப் பெருமையாகும். முற்காலத்தில் முத்தமிழுக்கு அவை அமைத்த தமிழகத்தின் இன்றைய கவிஞர்கள், அறிஞர்கள் இன்று புதுவையின் புதுநடைக் கவிதைகளைக் கண்டு பாராட்டுகின்றார்கள்.

கடந்த 20 வருடகால தமிழீழப் போராட்டத்தில், விடுதலைப்புலிகள் தமிழர் கலைபண்பாட்டுக் கழகம் அமைத்த பின்னர் முதலாவது முத்தமிழ்விழாவை எம் மக்களுக் காக கரவெட்டி - நெல்லியடியிலும் நடத்திய நாயகர் இவரென்றால் மிகையாகாது. எம் இனத்தைப் பற்றி வீரமோ, அவலமோ எழுத்து வடிவில் கவிதையாக எம் எதிர்கால சந்ததியினருக்கு புத்தக உருவில் தரும் புதுவை இரத்தினதுரை இந்தியப் புரட்சிக் கவிஞர் பாரதிக்கு நிகரானவராகும்.

செந்தமிழாய் அவர் நாவிலிருந்து, பாயும் அருவிபோல் கவிதைகள் வெளிவருவ தைக் காணக்கூடியதாக உள்ளது. இன்றும் எம்மிற் பலர் கம்பராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை என்று இந்தியக் காவியங்கள் பற்றியே விதந்துரைக்கின்றனர். மாறாக கவிஞர் புதுவை இரத்தினதுரை மக்கள்படும் அவலவேதனை, வீரப் படைநகர்வுகளைப் பற்றி நூல்வடிவில் எமக்குத் தருவது பிரபாகீதையாகும்.

கவிஞர் புதுவை அண்ணாவினால் வெளியிடப்படும் அனைத்து நூல்களும் எம்மவர் வீடுகளிலும், எதிர்கால சந்ததியினரிடமும் இருக்கவேண்டியனவாகும். இவ்வரிய படைப்பு களை வெளியிட உதவும் பொதுநல நிறுவனங்களை நாம் மனதார வாழ்த்துகிறோம்.

ஐ.அ.சிவானந்தம்
தமிழ் மக்கள் மன்றம்
பிரித்தானியா.

02.03.2005


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஈழத் தமிழரின் விடிவுக்கு பூபாளம் இசைக்கும்
புதுவைக் கவிஞனுக்கு வாழ்த்துக்கள்.




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தன் கவிதைகளால் தணல் மூட்டும்
தமிழீழத் தேசியக் கவிஞனை வாழ்த்துகிறோம்.




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# புலம்பெயர்ந்தோர்க்கும் பலம்கொடுக்கும் சிரஞ்சீவி

கவிஞன் என்பவன் காலத்தின் கண்ணாடியாகத் திகழ்வதுடன், மக்களின் மனச்சாட்சியாகவும், மண்ணின் வாசனையாகவும் துலங்கவேண்டும். இந்த வரிசையிற்தான் பாரதி, பாரதிதாசன் ஆகியோர் ஒளிவீசினர். இவர்கள் சென்ற பாதையிற்தான் ஈழத்து இரு கவிஞர்கள் தம்மைப் புடமிட்டுக்கொண்டனர். ஒருவர் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன். மற்றவர் புதுமைக் கவிஞர் புதுவை இரத்தினதுரை ஆவார். புதுவை என்றால் எமக்கு முன்னே துலாம்பரமாவது மண்ணும், மக்களுமே. பெண்ணையும் பொன்னையும், பூவையும் பூவையரையும் கவிபாடிய பலர் இருக்க மண்ணையும், மண்ணின் மைந்தர்களையும் கவிபாடச் சங்கநாதம் ஒலித்துப் புறப்பட்டவரே புதுமைக்கவி இரத்தினதுரை.

தமிழர் தாயகத்தைக் காலால் அளந்ததுமட்டுமல்ல, தன் பாவாலும் அளந்திருக்கிறார். காடு, மேடு, பள்ளம், வெள்ளம் என்று அலைந்துதிரிந்த போராளிகளின் தளர்ச்சியைப்போக்க தாலாட்டுப்பாடியவரே இவர். வியர்வைசிந்திக் கண்ணயரும் வேளையில் எல்லைக் காவலர்களுக்கு இவரது பாக்கள் பூக்களாக மலர்ந்து நறுமணத்தைப் பரப்பின. கையேந்திய பாரத்தால் துவண்டு தள்ளாடிய போராளிகளுக்கு இவரது பாடல்கள் தெம்மாங்கு பாடின. தாயகத்தின் சந்துபொந்துகளிலும், மூலை முடுக்குகளிலும் இவர் வரைந்த பாடல்கள் நாதம் கிளப்பி பிரணவ ஒலியாய்க் கீதமிசைத்தன.

புதுவையின் பாடல்கள் தாயகத்தை விட்டுக் கிளம்பி இந்துமகா சமுத்திரத்தையும், பசுபிக் சமுத்திரத்தையும் கடந்து புலம்பெயர்ந்த மக்களுக்கும் பலம் கொடுக்கும் சிரஞ்சீவிச் செடியாக மிளிர்கின்றன. ''என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்'' என்று கவிபாடிய பாரதியின் குரலுக்கு ஈடாக "சொந்தநிலம் வேண்டும் அதுவே வரமாகவேண்டும்" என்று இவரது கவி குரல்கொடுத்தது. பாரதியைக் கேள்விப்பட்டதுடன் அறிந்துமிருக்கின்றோம். ஆனால், இவர் வாழ்ந்த காலத்தில் வாழும்பேறு எமக்குக் கிட்டவில்லை. தாயகத்தின் குரலைத் தம்பூரா மீட்டிய புதுமைக்கவி புதுவையின் காலத்தில் நாம் வாழ்வது எமக்குக் கிடைத்த பெறுதற்கரிய பெரும் பேறாகும்.


இணுவை ச.சிறீரங்கன்

06.03.2005

இலண்டன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive


புதுவைக் கவிஞனை
புலம்பெயர்ந்த நாட்டிலிருந்து வாழ்த்துகிறோம்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கவிதைகளால் எம்முள்ளே விடுதலைக் கனல் மூட்டும்
தாயகக் கவிஞனை வாழ்த்துகிறோம்.




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## இதுவரையான கவிஞரின் கவிதைத் தொகுப்புகள்

* வானம் சிவக்கிறது 1970
* ஒரு தோழனின் காதல் கடிதம் 1976
* இரத்த புஷ்பங்கள் 1980
* களத்தில் மலர்ந்தவை I 1989
  இறுவட்டுக் கவிதைகள்
* நினைவழியா நாட்கள் 1993
* களத்தில் மலர்ந்தவை II 1997
  இறுவட்டுக் கவிதைகள்
* உலைக்களம் 2003
* பூவரசம் வேலியும் புலுனிக்குஞ்சுகளும் 2005

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கவிதைகளால் எம்முள்ளே விடுதலைக் கனல் மூட்டும்
தாயகக் கவிஞனை வாழ்த்துகிறோம்.


# PARTY PARADISE

**One Stop ... Party Shop**

*Wedding*
*Reception*
*Puberty &*
*Arangetram*



தமிழில் "எங்கள் திருமணம்" "பூப்புனித நீராட்டு விழா" என பொறித்த பலூன்கள் கிடைக்கும்

**Hall Decorations**
133 Carlyle Road, Manor Park,
London E12 6BS
T:020 8553 9857
M: 07939 287 890

**Shop**
777 Romford Road, Manor Park,
London E12 5AN
T:07961 199 424
M: 07939 287 890


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

Your Resilient Partner
Offers
Multi-million Pound
Funding Facilities
and
Consultancy
For the
Purchase / Development of
Commercial Property
to the

**Tamil Community**

# WORLDWIDE

GATPAHAM
"thriving in any climate"

Commercial Property Consultants &
Chartered Surveyors

**Gatpaham Properties Ltd**
Crown House, 72 Hammersmith Road
London W14 8TH

T 0870 099 2450 F 0870 099 2451
E info@gatpaham.com W www.gatpaham.com
07939 999 999

RICS

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive